EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 15

## கூளமாதாரியில் சமூகச்சிந்தனை

**கட்டுரை ஆய்வாளர் முனைவர். எஸ்.சாபீரா பேகம்[1]**
[1]உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை,
காதிர் முகைதீன் கல்லூரி,
அதிராம்பட்டினம் - 614 701
தஞ்சாவூர் மாவட்டம்.
**சா. சகுபர் நிசா[2]**
*[2]முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*காதிர் முகைதீன் கலைக்கல்லூரி,*
*அதிராம்பட்டினம் - 614 701,*
*தஞ்சாவூர் மாவட்டம்.*

## *முன்னுரை*

இலக்கியம் என்பது பல்வேறு பரிணாமங்களை உடையதாகும். பல்வேறு இலக்கிய வகைகைகளை தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்மொழி எனில் மிகையன்று. இக்காலத் தமிழ் இலக்கிய வகைமைகளில் புதினம் சிறப்பிடம் காரணம் வரலாறு, சமூகம், பண்பாடு போன்றவை சார்ந்த பதிவுகளை வெளிப்படுத்தும் சமூக நிலைக்களமாக, சமகால நிகழ்வுகளை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகிறது.

இத்தகைய புதின இலக்கிய மரபில் செம்மாந்த பதிவுகளை தமக்கே உரிய மொழி நடையில் இவ்விலக்கிய உலகிற்கு வழங்கி வரும் படைப்பாளர்களுள் "பெருமாள்முருகன்" குறிப்பிடத்தக்கவராவார். இவரது பல்வேறு புதினங்களில்

"கூளமாதாரி" எனும் புதினத்தில் இடம்பெறும் சமுதாயச் சிந்தனை குறித்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## சமூகம், சமுதாய விளக்கம்

ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மட்டும் ஒன்றாக இணைந்து வாழ்வது தான் சமூகம். பல சமூகங்கள் இணைந்து வாழும் பகுதியே சமுதாயம் என்பர். மாறுபட்டப் பண்பாடுகளைக் கொண்ட மக்கள் பரவி வாழும் பரப்பளவில் பெரிய பகுதியே சமுதாயம் என்பர். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் "சமுதாயம்" நம் முழு உடம்பு எனில், சமூகம் என்பது அதில் உள்ள ஓர் உறுப்பு. இவை இரண்டும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால் மட்டுமே தனித்துவமான நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

சமூகம் என்பது தனிமனிதர்கள் கூடி வாழும் குழுமம் இக்குழுமம் என்பது குடும்பம், சாதி, மதம், மொழி, இனம், வகுப்பு, கிராமப்புறம், நகர்ப்புறம், ஆண், பெண் என வெவ்வேறு குழுமங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவு பற்பல காரணங்களால் உருவாக்கப்பெற்றது.

ஒரு குழுசார்புடையது, ஒரு மதக் குழுவினர் மட்டுமே சேர்ந்து வாழும் தன்மையுடைய மதம், சாதி, உறவினர்கள் அவைசார்ந்த குழுக்கள் என்னும் அளவில் வாழக்கூடிய சிறு கூட்டம். இஃது அளவில் சிறியது "மனிதர்கள் ஒன்றுகூடி உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு வாழும் போது சமூகம் உருவாகிறது".

மேலும் மனித இனம் முழுவதையும் உள்ளடக்கிய இஃது சாதி, மதம், இனம், நாடு என்ற பரப்பில் வாழும் பெரிய கூட்டம் "சமுதாயம் என்பது மக்களின் கூட்டுத்தொகுதி என்றும், கூட்டுவாழ்க்கையின் ஆட்சி முறையை ஒட்டி ஆள்கின்றன, ஆளப்படுபவன் என்ற இரு இனங்கள் இத்தகைய அமைப்பு முறையினை பெருமாள்முருகன் நாவல்களில் ஒன்றான கூளமாதாரியில் காணமுடிகின்றது. கூளமாதாரியில் விளிம்புநிலை மனிதர் வாழ்வை விலாவாரியாகச் சித்தரிக்கும் பாங்கினை விளக்கியிருப்பது குறிப்பிடத்தகுந்தது ஆகும்.

## வேளாண்மை - தொழில் சமுதாயங்கள்

சமுதாயங்கள் அனைத்தும் கிராமங்களையே அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. இம்மக்கள் அனைவரும் தனித்தனி சமூகமாக வாழ்கின்றனர். ஒவ்வொரு சமூகத்திற்கும் தனி பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் உண்டு. மேலும், இவர்கள் தமது சமூக மக்கள் அப்படித்தான் வாழவேண்டும் என்ற வழக்காறுகளை உருவாக்கிக் கொண்டு அதையே தமது சமூகத்தின் சட்டமாகவும் ஆக்கிக் கொள்கின்றனர்.

இச்சட்டத்தை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதும் உண்டு. இவை சாதி அடிப்படையில் மட்டுமின்றி வேளாண்மைத் தொழில் சார்ந்த மக்களிடத்தில் அதிக அளவில் காணப்படுவது குறிப்பிடத் தகுந்தது. இத்தகைய வேளாண்மைத் தொழில் சார்ந்த மக்களிடத்தில் அதிக அளவில் காணப்படுவதைக் கூளமாதாரி நாவல் வெளிப்படுத்துகின்றது.

## சாதி எனும் புற்று

சாதி என்பது பிரிவு, பிளவு என்பதையே குறிக்கும். இறைவன் படைப்பில் ஆண், பெண் என்பதுதான் எனும் கருத்தை கூளமாதாரியில் பின்வருமாறு பதிவு செய்கிறார் ஆசிரியர்.

"சாதி எனும் பெரும் பாரம் தாங்கிநிற்கும்
சமுதாயச் சுமைதாங்கி நாங்கள் - எம்மோர்
ஆதி முதல் கண்டபிணி, புதுமை என்னும்
அரு மருந்து தீர்க்குமென அறிஞர் சொன்ன
சோதிடமும் பொய்யாகி, நாட்கள் தோறும்
சுமை இன்னும் கனமாகி அசைந்து செல்லும்
மேதியினும் கதிகுன்றி நனைத்துத் தூக்கும்

வீண்செயலில் ஆற்றலெலாம் விரயம் செய்துகொண்டிருக்கிறோம்".

என்பது தலைமுறை தலைமுறையாக நலியும் நமது சமுதாயத்தின் அழுகுரல் சாதியெனும் இந்தப் புற்றுநோயினின்றும் நாம் விடுபடும் வரை நமக்கு புதுத்தரிசனம் கிடைக்காது" என்ற சாதியக் கருத்து கூளமாதாரியில் இடம் பெற்றுள்ளது.

## சாதி சமய வேறுபாடுகள்

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் வள்ளுவர்,
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" என்கிறார்.

'இம்மண்ணுலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் சரிநிகர் சமம்' என்பதே நிதர்சனமான உண்மை. இறைவன் அனைவரையும் ஒன்றாகவே படைத்தான். ஆனால், மனிதன் சுயநலத்தால் மனிதனுக்கு மனிதன் அடிமை செய்து உணர்வைப் பறிக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கும் தன்மையை நாவலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். வேறுபாடுகளையும் அதனால் படும் இன்னல்களையும், துயரினையும் கூளமாதாரி நாவல் வழி எடுத்தியம்புகிறார் நாவலாசிரியர். இதனை,

“வெட்டுக் காட்டாருடையது பெருத்த பண்ண ஊறிலேயே அவரைத்தான் ‘ஒசந்தகை’ என்பார்கள். ஆங்கே பண்ணயம் கட்டுகிற ஆள்காரர்களாக ஐந்தாறு பேர் மட்டும் உண்டு. அதில் வவுரியின் அப்பனும் ஒருவன். எல்லா நாட்களிலும் ஏதாவது வேலை இருக்கும். கொஞ்சம் சடவாக இருந்து அப்பன் போகவில்லை என்றால், வளவுக்கு ஆள்வந்துவிடும்’ . என்ற இடையர்களின் நிலை இடம்பெறுகின்றது. மேலும், மற்றொரு இடத்தில்; ‘பண்ணயம் கட்டறவனுக்கு ஊட்டுல என்னடா வேல, தவசம் களத்துல இருக்கறப்பவே அளந்து வாங்கும்போது இருந்த சந்தோசம் வேலை செய்யறப்பவும் இருக்கோணும்டா? என்பார் பறிதைக்கிற வேலை அதைத் தொடர்ந்து மூன்று கிணறிலும் நீர் இறைப்பு நடத்த வேண்டும் என்று அதைத் தொடர்ந்து பல வேலைகள்; இருக்கும்.

பறியில் எங்காவது கண்மயிர் அளவுக்கு ஓட்டை இருந்தாலும் நீர் பீரிட்டு வந்தாலும் என்னடா தைக்கிற என்று கத்திக்குவிப்பார் என்பதிலிருந்து அவர்களுடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக வேண்டும்” . பண்ணையார் திட்டுவதற்கு அடிப்பணிய வேண்டிய நிலையிலும் சாதிப் பேரைச் சொல்லி திட்டுபவராக மேல்தட்டு மக்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## பாடம் போடுதல்

தெய்வ வழிபாடு மக்களை நல்வழிப் படுத்துவதற்காகவும் நல்வாழ்வு வாழ்வதற்காகவுமே உருப்பெற்றது. இத்தகு வழிபாட்டை மனிதன் தன் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டான். மேல்தட்டு மக்கள், கீழ்தட்டு மக்களை அடிமைப்படுத்துவதற்கு இத்தெய்வ வழிபாட்டைப் பயன்படுத்திக் கொண்டான். இம்முறையை,

“மொண்டு மந்திரம் சொல்லி நோய்களைத் தீர்ப்பான். கண்களை மூடிக்கொண்டு அவன் வாய் முணுமுணுக்கும் கை வேப்பந்தழையையோ துண்டுச்செறகையோ வீசும் ஆளாக இருந்தால் அந்தர வெளியில் காற்றை நோக்கி வீசுவான். ஆடாக இருந்தால் அதன் தலையை அந்தர வெளியில் காற்றை நோக்கி வீசுவான் அப்போது பார்க்க அவன் முகம் இறுகி ஒளிவீசும். பாடம் முடிந்த பின் கிழக்கு நோக்கி கரட்டைப் பார்த்து கும்பிடுவான் எல்லோரும் அவனிடம் பாடம் போட்டுக் கொள்ளுவார்கள்” . என்பதன் மூலமாகவும்,

“குழந்தைகளுக்கு முடிப்பாடம் போடுவான் குழந்தைகளைக் கொண்டுவரும்போதே எங்கிருந்தாவது வேப்பங்குழையை ஒடித்துக் கொத்தாகக் கொண்டுவருவார்கள். அந்தத்தழையையே வாங்கிப்பாடம் போட்டு அனுப்புவான். எல்லோரும் அவனிடம் பாடம் போட்டுக் கொள்ளுவார்கள்".

என்ற பாடம் போடும் வழக்கம் இருந்த செய்திகளை கூளமாதாரி நாவல்வழி அறிய முடிகின்றது.

## முடிவுரை

ஒரு குறிப்பிட்ட இனமக்கள் தங்களை மேலானவர்கள் என்று கூறி கீழ்தட்டு மக்களை அடிமைப்படுத்தி ஆளும் முறையை கையாண்டனர். இதனால் மேல்வர்க்கம், கீழ்வர்க்கம் எனும் பாகுபாடு தோன்றியது. இப்பாகுபாட்டால் மனித மனம் சமுதாயப் பிரிவினையால் பிளவுபட்டு சாதிவெறி கொண்டு வாழ்வதால் மனிதநேயமின்றி மனித உயிர்கள் பலியாகின்றன. நிறைவாக இன்றைய காலச்சூழலிலும் சாதி, சமய பாகுபாடுடன் மனிதன் மனிதமற்று வாழ்வதை பெருமாள்முருகன் நாவலான கூளமாதாரியில் பதிவு செய்திருப்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## பயன்பாட்டு நூல்கள்


1.ம.இளங்கோவன் - வள்ளுவரும் வள்ளலாரும் கண்ட சமுதாயம்

2.ந. சாந்தா – கலைமாமணி விக்கிரமனின் கதைகளில் பெண்கள்

3.செபமாலை ராசா – சமுதாயப் பகுப்பாய்வு

4.வா.செ. குழந்தைசாமி – சமுதாய சிந்தனைகள்

5.செ. பரமேஸ்வரன் - சமூக உளவியல்

6.திருக்குறள் - பெருமை

7.பெருமாள்முருகன் - கூளமாதாரி

8.கீதாரி - தமிழ்ச்செல்வி.